
# வழிபாடு



ஆசிரியர் அமரர்

## பண்டிதர் க.கணபதிப்பிள்ளை.

12.02.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடு

அமரர்

பண்டிதர் ப. கணபதிப்பிள்ளை

2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## கலாநிதி குகஸ்ரீ க.சொக்கலிங்கம்
## (சொக்கன்)

அமரர் ப.கணபதிப்பிள்ளை அவர்களை அரைநூற்றாண்டுக்கு முன் பிருந்தே அறிவேன். இன்று யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் என வழங்கும் ஸ்ரான்லி மத்திய கல்லூரியிலே உடன்சாலை மாணாக்க ராய் நாம் கல்வி கற்ற காலம் அது. சமயவாழ்வு பற்றிப் பெரிதும் அலட்டிக்கொள்ளாத அந்தக் கட்டிளம் பருவத்திலும் 'தூயவெண்ணீறு துதைந்த' நெற்றியுடனே அவர் காட்சி தந்ததும், வெள்ளிக்கிழமைக் கூட்டுப் பிரார்த்தனையில் பத்திபூர்வமாய் ஈடுபட்டதும் இன்றும் நினைவிலே பசுமையாக உள்ளன.

அமரர் அவர்கள் மிக்க தமிழபிமானம் வாய்ந்தவர். அதனிலும் அதிக மாக உண்மைச் சைவசமயியாய்த் திரிகரணசுத்தியோடு வாழ்நாள் முழுவ தும் வாழ்ந்தவர். எல்லாச் சமயங்களின் இருப்பையும் மதித்தவராயினும், தமக்குப் பிறவியிலேயே அமைந்துவிட்ட சைவசமயத்தில் அவர் உறைந்து நின்றவர் என்பதை நான் நன்கறிவேன்.

அமரரின் சமயக் கடைப்பிடியானது குருட்டுத் தனமானதன்று. புற ஆசாரங்களைக் காரணகாரிய ஆய்வின்றி அவர் பின்பற்றினார் அல்லர். ஏன், எப்படி, எதற்கு என்ற வினாக்களைக் கிளர்த்தி நிறைவான பதில் கிடைத்தால் மட்டுமே அவற்றைச் சிக்கெனப்பற்றிடும் அறிவாளராய் அவர் விளங்கினார்.

தாம் காலம் முழுவதும் பெற்ற சைவசமயம் சார்ந்த நிலையான உண்மைகளதும் அனுபவங்களதும் களஞ்சியமாக இன்று அவரின் 'வழி பாடு' என்ற நூல் வெளியாவது மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும். சைவசமய சாதகர்கள் அறிந்து கடைப்பிடிக்கவேண்டிய அனைத்து விடயங்களும் இச்சிறிய நூலிலே அடங்கியுள்ளன. இவ்வகையில் இது, சைவர்களுக்கு 'எய்ப்பில் வைப்பாய் உதவும்' என்பது என் உறுதியான நம்பிக்கை.

இந்நூலை எழுதிமுடித்ததோடு தமது வாழ்நாள் இலட்சியம் இனிது நிறைவேறிவிட்டது என்ற மனநிறைவோடு, சைவப்பெரியாரான அமரர் ப. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆடல்வல்லானின் குஞ்சிதபாத நீழலினை அடைந்துவிட்டார். அவரின் நினைவாக 'வழிபாடு' நூலுக்கு முன்னுரை வழங்கக் கிடைத்த பெரும்பேற்றினை நினைந்து மகிழ்கின்றேன்.

**க.சொக்கலிங்கம்.**

*ஓம் சாந்தி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வழிபாடுபற்றி இன்று மக்களிடையே தெளிவான சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. மக்களின் வழிபாடு உரிய பயனைக் கொடுக்க வேண்டுமானால் அவர்களுக்கு வழிபாடுபற்றிய தெளிவானநிலை ஏற்படவேண்டுமென்பதற்காகவும் வழிபாடுபற்றி எமது கருத்துக்களை அவ்வப்போது சிலரிடம் சொல்லுவதிலும்பார்க்க, பலர் அதுபற்றி அறிவது பயனுடையதாகுமெனக் கருதியமையாலும் இந்தச் சிறுநூலை வெளியிட முன்வந்துள்ளேன். இந்நூல் பற்றிய நேயர்களின் கருத்துக்களை வரவேற்கின்றேன்.

நன்றி.

**பண்டிதர் ப. கணபதிப்பிள்ளை,**
**ஓய்வுபெற்ற அதிபர்,**
**யாழ்-அரியாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## திரு.க.சண்முகலிங்கம். J.P.
## (ஓய்வு பெற்ற அதிபர்)

அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்பவர் நாங்கள். எங்கள் வாழ்வு எப்பவோ நிர்ணயிக்கப்பட்டு விட்டது. செய்த கர்மவினைக்கு ஏற்பவே அனுபவிக்கின்றோம். அனுபவிப்பவை போக, மேலும் செய்யும் வினைகளை நல்லதாக்கவே முயலவேண்டும். எம் செயலை இறைவன் செயலாகக் கருதும்போது, எதற்கும் நாம் பொறுப்பாக மாட்டோம். இவ்விதம் நல்லபடி வாழ்ந்து, வழிகாட்டியவரே அமரர் பரமானந்தர் கணபதிப்பிள்ளை அவர்கள்.

நிறைந்த கல்விப் புலமையினாலும், வாழ்வில் பெற்றுக்கொண்ட அனுபவத்தினாலும், தெய்வ அருளினாலும், தமது சீரிய சிந்தனையில் உதித்த கருத்துக்களை "வழிபாடு" என்னும் சிறந்த நூலாக ஆக்கித் தந்துள்ளார்கள். இன் நூலை எழுதி முடித்துத் தனது கனவு நனவாகி விட்டதே என்ற மனநிறைவோடு அமரராகிவிட்டார்.

இந்நூலை அச்சிட்டு வெளியீடு செய்ய உதவிய அன்னாரின் குடும்பத்தினருக்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சைவ உலகம் இந் நூலைப் பெற்றுப் பயனடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இறைவனே இயற்கையாகத் தோற்றுகின்றான்

அணுவுக்கு அணுவாகவும் அப்பாலுக்கு அப்பாலாகவும் விளங்குபவன் இறைவன். அவன் எல்லாம் கடந்த பொருளாக விளங்குகின்றான். அதனால் அவன் கடவுள் எனப்படுகின்றான். ஐம்பொறிகளாலோ ஐம்புலன்களாலோ அறியமுடியாத மாபெருஞ் சக்தியே அவன். சும்மா இருக்கும்பொழுது சிவம் ஆகவும் இயங்கும் பொழுது சக்தியாகவும் விளங்குகின்றான். அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அவன் குணமிலான், குறியிலான், ஊரிலான், பேரிலான் ஆவன். நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐந்து பௌதிக இயல்புகளும் அவனே. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையான வடிவுகொண்ட பௌதிக அணுக்களின் சேர்க்கையே யாகும். இத்தகைய அணுக்களின் கூட்டமைப்பில் உருவானதே இந்த உடம்பாகும். இந்த உண்மையைக் கூறும் வகையிலேயே, "ஐந்து கல்லால் ஒரு கோட்டை, அந்த ஆனந்தக் கோட்டைக்கு ஒன்பதுவாசல்" என்று கூறிப் போந்தார் சித்தர் ஒருவர். பஞ்சபூதங்களின் உள்ளே நின்று, அவற்றை இயக்குபவன் இறைவனே. அவன் ஆட்டுவிக்கின்றான். நாம் ஆடுகின்றோம். இதனை "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்னும் வாக்கால் அறியலாம்.

ஆனால், இவற்றை வெறுமனே பஞ்சபூதங்களாகக் காண்பவன், அவற்றுள் நின்று இயக்குகின்ற இறைவனைப் பரம்பொருளைக் காண்பதில்லை. அவனால் காணவும் முடிவதில்லை. இதனால் அவனுக்கு இறைவன் அறியப்படாதவனாக இருக்கின்றான். அதாவது, இந்தப் பார்முதல் பூதம் பரத்தை மறைத்து விடுகின்றது. இவ்வுண்மையைச் சித்தர் ஒருவர்,

"பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதல் பூதம்" என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கருத்தினையே வேறுவகையிலும் கூறியுள்ளார்.

"மரத்தை மறைத்தது மாமத யானை

மரத்துள் மறைந்தது மாமத யானை" கோவில்களில் அமைக்கப்பட்டிருக்கும் யானைவாகனத்தைப் பார்த்து, இது என்ன? என்று வினவினால், ஒருவர் "யானை" என்பர். இன்னொருவர் மரம் என்பர். அதாவது யானை என்பவருக்கு மரம் தெரிவதில்லை. மரம் என்பவருக்கு யானை தெரிவதில்லை. யானை வாகனம் என்பவரே இரண்டையும் காண்பவராகின்றார். இவ்வாறே இறைவனும் பஞ்சபூதங்களில் இரண்டறக் கலந்து விளங்குகின்றான் என்பதே உண்மையாகும். கடவுள் இல்லை என்பவனுக்கு இவைவெறும் பஞ்சபூதங்களாகவே தோன்றும். இந்நிலையிலிருந்து நோக்குபவர் களுக்குக் கடவுள் இல்லை என்னும் எண்ணமே தோன்றும். இது அறியாமையின்பாற் பட்டதாகும். இவ்வுண்மையை விளக்க இன்னுமொரு சித்தர் பாடல் உண்டு. அது வருமாறு:

"கல்லைக் கண்டால் மதனா நாயைக் காணோம்

நாயைக் கண்டால் மதனா கல்லைக் காணோம்"

மேற்படி பாடலின் உண்மையை உணர்த்த ஒரு கதை சொல்லுவார்கள். அது வருமாறு: ஒரு பிரபுவினிடம் பொருள் வேண்டி ஓர் ஏழை சென்றான். சென்றவன் உள்ளே செல்லாமல் திரும்பிவிட்டான். "வாசலில் ஒரு நாய் படுத்திருக்கிறதே" என்றான் அவன். "அது நாய் அல்ல. நாய் உருவத்தில் அமைந்த கல்லே அது" என்றார் அங்கு நின்றவர். அதன் பின்பு ஏழை நாயைக் கண்டுகொள்ளவில்லை. கல்லைத்தான் கண்டான். இதன் மூலம் நாம் புரிந்து கொள்ளவேண்டியது என்ன? எதனையும் மேலெழுந்த வாரியாக நோக்கி முடிவு எடுக்கக்கூடாது என்பதாகும். எதனையும் ஆழமாகச் சிந்தித்தே முடிவு எடுத்தல்வேண்டும். அதுவே அறிவு டைமையாகும், அதுவே மெய்யறிவாகும். மெய்யறிவு எனப்படுவது ஆழமான அறிவும் பரந்த அறிவும் கூர்மையான அறிவும் இணைந் ததேயாகும். முருகன் கையில் பொருந்தியுள்ள வேலாயுதம் இதையுணர்த்துகிறது. அதனால் அது ஞானவேல் எனப்படுகிறது. அறிவின் அடையாளமே வேல் எனலாம். இந்த உண்மைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துகொண்டு நாம் ஆழ்ந்து சிந்திப்போமேயானால், இயற்கையில் காணப்படுகின்ற அற்புதங்களைக் காண்போம், கண்டு வியப்படைவோம். எமக்குத் தெய்வ நம்பிக்கை தானாகவே வரும்.

இந்த இயற்கையின் அற்புதத்தை அறிந்து கொள்ள, ஒரு சிறு பறவையை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். அது பார்க்கிறது, கேட்கிறது, சுவையறிகிறது, மனவேறுபாடுகளை அறிகிறது, தட்ப வெப்ப நிலையை உணர்கிறது. இந்த ஐந்து புலன்களுக்குமே ஐந்து பொறிகள் செயற்படுகின்றன என்பதனை யாவரும் அறிவர். அந்தச் சிறிய பிராணியின் சின்னஞ்சிறு கண்ணானது ஒரு ஒளிப்படக் கருவி போன்றல்லவா செயற்படுகின்றது? இத்தகைய கருவிகள் அந்தச் சிறிய பிராணிக்கு யார் அமைத்துக் கொடுத்தார்? அக்கருவியை யார் இயக்குகின்றார்? இயக்குவது உயிர் என்றால் அந்த உயிரை இயக்குவது யார்? என்றிவ்வாறு எண்ணிப்பார்க்கும் பொழுது, அதன் பின்னணியில் ஒரு மாபெருஞ் சக்தி இயங்குவதை நாம் உணரமுடியும். இவ்வாறே உயிரினங்களிலெல்லாம் அந்த அற்புதமான சக்தி தொழிற்படுகின்றது என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். இந்தச் சக்தியே ஒவ்வொரு அணுவிலும் செயற்படுகின்றது. அவ்வாறே ஒவ்வொரு அண்டத்திலும் செயற்படுகின்றது. இவ்விடயத்தில் இன்னும் ஒன்றினை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும். அதாவது அணுக்கள் எவ்வாறு இயங்குகின்றனவோ அவ்வாறே அந்த அணுக்களாலான அண்டங்களும் இயங்குகின்றன என்பதாகும். இதனையே "அண்டத்தின் உண்மை உண்டையிற் பிறக்கம்" என்று சொல்லப்படுகின்றது. உண்மை என்பது உருண்டைவடிவான அணுக்களையேயாம். இதனையே இயற்கையின் இயக்கம் என்பர். இந்த இயற்கையையே நாம் கடவுள் என்போம். சக்தி என்றும் அழைப்பர். சக்தியென்று அம்பிகையை அழைப்பதும் இதனாலேயாம்.

இவ்வாறாக இயற்கையில் மறைந்து கிடக்கின்ற சக்திகளை உணர்ந்து கூறியவர்கள் மெய்ஞ்ஞானிகள். அவற்றை ஆராய்ந்து வெளிக் கொணர்ந்தவர்கள் விஞ்ஞானிகள். இத்தகைய விஞ்ஞானிகள்கூடத் தாம் அறிந்தமை மிகமிகச் சிலவே என்பர். அறியாதவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிறந்தவை என ஆதங்கமடைகின்றனர். எனவே இவற்றின் மூலம் எல்லாவற்றுக்கும் அப்பால் ஒரு சக்தி இருக்கின்றது என்ப தனை ஏற்றுக்கொண்டுள்ளனர். விஞ்ஞானிகளே கடவுள் உண்டு என்பதனை ஏற்றுக் கொள்ளும் பொழுது, நாம் ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது? எனவே கடவுள் இல்லை என்போர் அறிவிருந் தும் அறிவிலிகளே, கண்ணிருந்தும் குருடர்களே.

இதுவரை கூறியவற்றால் இயற்கையே இறைவன் என்பதனையும் இயற்கை வழிபாடு இறைவழிபாடே என்பதனையும் உணர்வோமாக. இவ்வகையிலேயே சூரிய வணக்கம் ஏற்பட்டது எனலாம். இதுபோன்றே நெருப்பு, நீர், வளி, ஆகாயம், மண் போன்ற பௌதிகப் பொருட்களும் வழிபாட்டுக்கு உரித்தாயின எனலாம். இது போன்றே இன்னும் வழிபாடுகள் தோற்றம் பெற்றன. இவ்வாறு இயற்கையை வழிபட்டு வந்தவர்களே இயக்கர் என அழைக்கப்பட்டனர். நாகத்தை வழிபட்டவர்கள் நாகர் என அழைக் கப்பட்டனர். இவர்கள் தமிழர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய இறைவன் எல்லா மக்களுக்குமே பொதுவானவன். இறைவனின் பெயர்தான் நாட்டுக்கு நாடு சூழலுக்குச் சூழல் வேறு வேறாக அமைந்துள்ளது. தமிழர் நீர் என்று சொல்லுவதைச் சிங்களவர் "வத்துறு" என்பர். வடமொழியர் "ஜலம்" என்பர். ஆங்கிலேயர் "வாட்டர்" என்பர். பெயர் வேறு பட்டதேயன்றிப் பொருளின் தன்மை ஒன்றுதான். அது போலவே இறைவனைத் தென்னாட்டவர்களாகிய தமிழர் சிவன் என அழைப்பர், வேறு நாடுகளில் "ஏகோவா" என்றும் "அல்லா" என்றும் "புத்தர்" என்றும் அழைப்பர். தென்னாட்டில் சிவன் என அழைக்கப்படும் இறைவனே எல்லா நாடுகளிலும் உள்ளவர்களுக்கும் இறைவன் ஆகின்றான். இதனைத் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் மணிவாசகர் அருள் வாக்கினால் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயங்களின் அடிப்படை

ஒவ்வொரு சமயமும் அவ்வச்சமயம் தோன்றிய சூழலுக்கு அமையவே தத்தமது சமயக் கோட்பாடுகளை வகுத்துள்ளன எனலாம். எனினும் எல்லாச் சமயங்களும் அன்பின் வழித்தேயாகும். அவை அன்பு நெறியையே போதிக்கின்றன. "மக்களே! நல்ல வழிகளில் செல்லுங்கள், தீய வழிகளில் செல்லாதீர்கள்" என்றுதான் போதிக்கின்றன. இது யாரும் மறுக் கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். சமயங்களுக் கிடையேயான வழிபாட்டு முறைகளிலேதான் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றை நாம் புரிந்துணர்வுடன் நோக்குதல் வேண்டும். ஒரு சூழலில் வசிப்பவர்களுக்குச் சரியாகப்படுவது இன்னொரு சூழலில் வாழ்பவர்களுக்குப் பிழையாகப்படலாம். இத்தகைய சிறிய வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாது நடந்து கொள்ளுதல் வேண்டும்.

இறைவனும். அன்பு, அருள் என்னும் உரைகற்களில் உரைத்தே அவரவர் அன்பின் தன்மைக்கேற்ப அருள் புரிகின்றான் என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

எனவே சமயங்களின் பெயரால் சண்டையிடுவதும், மதமாற் றம் மேற்கொள்ளுவதும் அறிவற்ற செயலாகும், பண்புடைமையு மாகாது. யேசுநாதர், நபிகள்நாயகம், புத்தபகவான் முதலிய மதமூலகர்த்தாக்கள், தம்முள் ஒருவரைஒருவர் சந்திக்க நேர்ந்தால் அல்லது ஒன்று கூடினால், அவர்கள் யாதுசெய்வார்கள்? தம்முள் மோதிக்கொள்வார்களா? இல்லவே இல்லை, அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்ததையிட்டு மகிழ்வார்கள். ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி மகிழ்வார்கள். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" அல்லவா? ஆனால் இவர் காட்டிய வழிகளாகிய சமயங்களில் செல்வோர்கள் என்ன செய்கின்றார்கள்? சமயங்களின் பெயரால் எதிரிகளாகி விடுகின்றார்கள், மதத்தின் பெயரால் மதங்கொண்டு மாய்கிறார்கள், மக்களையும் மாய்க்கிறார்கள், தத்தமது சமயத்தின் உள்ளேயே முரண்பாடு கொண்டு மக்களைக் குழப்பு கிறார்கள். மதத் தீவிரவாதிகள் எனத் தம்மைச் சொல்லிக் கொள்வோராலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அவலநிலை காணப்படுகின்றது. எனவே இத்தகைய வேறுபாடுகள் மக்களிடையேயும் புத்திசீவிகள் எனத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் தீவிரவாதிகளிடமும் இருந்து நீங்குதல் வேண்டும். எல்லாச் சமயங்களையுமே சகோதர சமயங்க ளாக எண்ணி மதித்தல் வேண்டும். எல்லா மதத்தவருடனும் அன்பாகப் பழகுதல் வேண்டும். கிறிஸ்தவ மதகுருவோ, இஸ்லா மிய மதகுருவோ, பௌத்த மதகுருவோ, இந்து மதகுருவோ மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கொண்டு மக்கள் சேவையில் இணைந்து செயற்பட வேண்டும். மக்கள் பணியே இறைபணியாகும். இதனையே "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார். கிறிஸ்தவம் அகிம்சையையும், இஸ்லாம் சகோதரத்துவத்தையும், பௌத்தம் ஜீவகாருண்ணியத்தையும், இந்து அன்பு மார்க்கத்தையும் முதன்மையாகக் கொண்டுள்ளன.

ஆராய்ந்து பார்த்தால் இவை ஒன்றுடன் ஒன்று இணைந்தே காணப்படுகின்றது எனலாம். விரதம் அனுட்டித்தல், நோன்பு இருத்தல் போன்ற வழிபாட்டுமுறைகள், பெரும்பாலும் எல்லாச் சமயங்களிலுமே காணக் கூடியதாக இருக்கின்றது. இத்தகைய தெளிவும் பரந்த நோக்கும் உலகமக்களிடையே காணப்பட்டால், "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் பரந்த நோக்கு மக்களிடையே இருக்குமானால் இன்று போர் மேகங்கள் எம்மைச் சூழ்ந்து கலக்கமாட்டா. உலகம் அமைதியுறும்.

## பலவகைப்பட்ட வழிபாட்டு முறைகள்

வழிபாட்டு முறைகள் சமயங்களுக்கிடையே வேறுபட்டு இருப்ப தைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒவ்வொரு சமயத்தின் உள்ளேயும் வேறுபட்ட வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. ஏன்? ஒரு குடும்பத்திலேயே வழிபாட்டு முறைகள் வேறுபடுவத தைக் காண்கிறோமே. எமது சைவசமயத்துள்ளும் நமது அறுபத்து மூன்று நாயன்மார்களது வழிபாட்டுமுறைகளும் வெவ்வேறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையே என்பதனை நாம் மறந்து விடக்கூடாது. இவ்வகையில் நோக்கினால், உலகில் எத்தனை மக்கள் உள்ளனரோ அத்தனை வழிபாட்டு முறைகளும் உள்ளன எனலாம். எனவே ஒருவர் அடுத்தவர் வழிபாட்டு முறையில் குறை காண முற்படக்கூடாது. வற்புறுத்தவும் கூடாது. எவரெவர் எந்த எந்த வழிபாட்டு முறை யைக் கைக்கொண்டாலும் அவ்வவ் வழிபாடுகளை மதிப்பீடு செய்பவன் இறைவனே. அவன் அன்பு என்னும் உரைகல்லில் பரிசோதித்துப் பார்த்தே அருள் புரிகின்றான் என்னும் உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். எனவே வழிபாடு என்பது அன்பின் வழியதேயன்றி வழிபாட்டு முறைகளின் தரத்தால் அன்று என்பதனை நாம் புரிந்து கொண்டால் போதும்.

**சமயங்கள் மிதப்புக் கட்டைகள் போன்றன.**

எல்லாச் சமயங்களையும் மதிக்கின்ற அதே வேளையில் நாம் தற்பொழுது பின்பற்றும் சமயத்தின் வழி நின்றே அதற்கமைய நமது வழிபாட்டை மேற்கொள்ளுதல் வேண்டும். நடுக்கடலில் மரக்கலம் கவிழ்ந்து அல்லது உடைந்து மக்கள் தவிக்கும் பொழுது, ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைத்த மிதப்புப் பொருளையே ஆதாரமாகக் கொள்ளுதல் வேண்டும். அப்பொழுது தான் பாதுகாப்பாகக் கரையேறமுடியும். கையில் கிடைத்த மிதப்புப் பொருளை விடுத்து வேறொரு மிதப்புக்கட்டையே நல்லது என எண்ணிக் கையில் இருந்த மிதப்புக் கட்டையை விட்டு விட்டால், இரண்டுங்கெட்டான் நிலையாகிவிடும். எனவே கடலில் மூழ்கவேண்டி ஏற்பட்டிருக்கும். கையில் கிடைத்த மிதப்புக் கட்டையைக் கொண்டு கரையேறுதல் போலவேதான் நாம் பின்பற்றும் சமயம் என்னும் மிதப்புக் கட்டையைப் பற்றிக் கொண்டு இறைவனின் அன்பே துணை எனக் கொண்டு செயற்படுபவனே இறைவனது அருளாகிய துறையை அடைவான். இக்கருத்தி னையே வள்ளுவப் பெருந்தகையும்

"நல்லாற்றா னாடி அருளாள்க, பல்லாற்றாற்
றேரினும் அ∴தே துணை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருக்குறளில் கூறியுள்ளார். பல்லாறு எனப்படுவது பலவகையான சமய நெறிகள் ஆகும். ஆறுகள் எல்லாம் அவை எங்கெல்லாம் ஊற்றெடுத்தாலும் இறுதியில் கடலிலேயே சங்கமம் ஆகின்றன. அது போலவே எல்லாச் சமயங்களும் ஓரிடத்திலேயே சங்கமமாகின்றன. அதுதான் அருட்டுறையாகும்.

**வழிபாடு என்றால் என்ன?**

வழி + படு அதாவது வழியில் படுதல் எனப்படும். நல்ல வழியில் செல்வது என்பதாகும். அந்த நல்வழிகள் எவை என்பது பற்றி அறிவிற் சிறந்த ஒளவையாரும் "நல்வழி" என்னும் நூலையே எமக்குத் தந்துள்ளார். அந்த நல்வழிகள் எவை என்பதைனை உணர்ந்து, அந்த நல்ல வழிகளில் ஒழுகுதலே வழிபாடு எனலாம். இக்கருத்தினை வலியுறுத்தும் அவரது பாடலை நோக்குவோம்.

"புண்ணியமாம் பாவம்போம், போனநாட் செய்தஅவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்"

என்கிறது வாக்குண்டாம் பாடல்.

இப்பாடலில் சொல்லப்படுவன கவனத்துக்குரியன. ஒருவர் செய்யவேண்டியது புண்ணியம், செய்யக் கூடாதது பாவம், புண்ணியம் என்றால் நல்ல செயல், பாவம் என்றால் தீயசெயல், ஒவ்வொருவரும் கொண்ட நல்ல செயல்களும் தீய செயல்களுமே அவரவர் அனுபவித்து வரும் இன்பதுன்பங்களுக்குக் காரண மாகும். எனவே இன்பத்தை அனுபவிக்க விரும்புவோர் நல்ல செயல்களையே செய்தல் வேண்டும். தீயசெயல்களைச் செய்தால் துன்பத்தை அனுபவிக்க வேண்டிவரும் என்பதாகும். எந்தச் சமயத்தவர்களும் இந்த உண்மையையே உபதேசிக்கின்றனர் என்பது ஒளவையாரின் கருத்தாகும், "எச் சமயத்தோர்" என்று குறிப்பிட்டமையால் எல்லாச் சமயங்களையுமே அவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது பெறப்படுகின்றது அல்லவா? அப்படியானால் சமயங்கள் தமக்கிடையில் ஏன் மோதிக்கொள்ளல் வேண்டும்?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயம்

இந்துசமயம் என்று ஒரு சமயம் இல்லை என்பார் நாவலர் பெருமான். இந்துநதியை அண்மித்த பகுதிகளில் வாழ்ந்தவர்களை இந்துக்கள் என அழைத்தனர் பிறர். அவ்வாறே சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பனவற்றைப் பின்பற்றுவோரை இந்துக்கள் என அழைத்தனர் அந்நியர். இம்மதங்கள் தமக்குள் மோதிக்கொள்ளாமல் இருப்பதற்கு "இந்து" என்னும் சொல் கவசமாக அமைந்துள்ளது எனலாம். அல்லாமலும் இந்தச் சமயங்களின் வழிபாட்டு முறை களும் ஒத்தனவாகவே காணப்படுகின்றன. சமயங்கள் எல்லாம் பெரும்பாலும் ஆலயவழிபாட்டுக்கு முதன்மை அழிக்கின்றன எனலாம். ஆலயங்களைப் புறக்கோயில்களாகவும் மனதை அகக் கோயிலாகவும் கொள்ளலாம்.

புறக்கோயில் வழிபாட்டின் மூலம் பெறுகின்ற அனுபவமே அகவழிபாட்டுக்கு இட்டுச் செல்கின்றது என்பதாகும். இந்தப் புறக்கோயில் அகக்கோயில் ஆகியற்றின் தொடர்பினைப் பின்வரும் திருமுறைப் பாடல்களால் அறிந்து கொள்ளலாம்:

பாடல் 1

"காயமே கோயி லாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றுவிக் காட்டினோமே"
(காயம்-உடம்பு)

பாடல் 2.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்.
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்.
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

அகக் கோயில் வழிபாட்டுக்கான பயிற்சியைப் பெறுவதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கோயிலில் செய்யப்படும் வழிபாடாகும் என்பதனை இப் பாடல்கள் மூலம் நாம் தெளிவு பெறுவோமாக.

**சைவசமய வழிபாடு.**

சைவசமயம் காட்டும் வழிமுறைகளை நோக்குவோம். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே சைவசமய மாகும். சிவன் என்னும் பொழுது சிவந்த திருமேனியை உடைய வன் என்று பொருள்படும். எனவே சிவனின் திருவுருவப் படங்கள் நீலம் முதலிய வேறுநிறங்களில் அமைவது பொருத்தமற்றதாகும். ஆனால் இன்று நீலவண்ணனாகவே சிவபெருமான் காட்சி அளிக்கின்றார். சிவந்த நிறத்தில் அமையவேண்டிய சிவன் படம் நீலநிறத்திலும் நீலநிறத்தில் அமையவேண்டிய உமாதேவியார் படம் சிவந்த நிறத்திலும் காணப்படுகின்றன. இது வேதனைக்குரிய தாகும். ரவிவர்மா ஒப்பற்ற ஓவியர். அவர் இன்று இல்லை. அந் தக் குறையே இது எனத் தோன்றுகின்றது. இறைவன் இந்நிறத்தன் என்று வரையறையிட்டுக் கூறமுடியாதவகையிலும் சிவன் என்னும் பெயருக்குப் பொருத்தமுடைய நிறம் சிவப்பு நிறமேயாகும். ஏனையவை அவமே. “நீலமேனி வாலிழைபாகன்” என்னும் தொடர் உமையம்மை நீல நிறம் பொருந்தியவர் எனக் காட்டுகின்றது.

சிவனைச் சிவம் எனவும் அழைப்பதுண்டு. சிவம் என்றால் அன்பு என்பார் திருமூலநாயனார். சிவம் வேறு அன்பு வேறு அல்ல என்பது அவரது கருத்தாகும். அப்படிப் பார்க்கும் பொழுது சிவத்தை மனதில் இருத்த விரும்புவோர், அன்புக்கு விரோதமான செயல்களில் ஈடுபடமாட்டார்கள். ஈடுபடவும் கூடாதாகும். ஓர் உயிரைக் கொல்லும் பொழுது அன்பும் கொல்லப்படுகின்றது என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனவே "அன்பு" அற்ற செயலால் பெறப்படும் மாமிசம் உண்பதும் அன்பற்ற செயலேயாகும். அன்பை விடுத்துச் செய்யப்படும் கொலையினால் ஏற்படும் மாமிசம் ஆகிய "சவம்" உள்ளத்தின் உள்ளே செலுத்தப் பட்டால் அந்த உள்ளத்தில் உறைகின்ற “சிவம்” என்செய்யும்? சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம். சவத்தை விரும்புவோரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவம் அணுகாது என்பது பெறப்படுகின்றது. அன்பே சிவம் என்னும் கருத்தினை விளக்கும் திருமூலநாயனார் திருமந்திரம் வருமாறு:

“அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே”

இந்த அன்பு என்னும் பண்பில் இருந்து தோற்றம் பெறுவதே அருளாகும். இதனாலேயே “அன்பீனும் அருள்எனும் குழவி” என்று சொல்லப்படுகின்றது. தொடர்புடையார் மாட்டுக் கொள்வது அன்பாகும். எல்லா உயிர்களிடத்தும் வேறுபாடு காட்டாது கொள்ளும் இரக்கமே அருளாகும். இக்கருத்தினை

“எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே”

என்று தாயுமான சுவாமிகள் பாடல் எடுத்தியம்புகிறது.

**நான்குவகை வழிபாடு**

சைவ சமயத்தில் நான்கு வழிபாட்டு முறைகள் பற்றிச் சொல்லப்படுகின்றது. அவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். பெருமளவு உடம்பாலும் சிறிதளவு உள்ளத்தாலும் செய்யப்படும் வழிபாடு சரியை வழிபாடாகும். சரியை வழிபாடுகளாவன இறைவன் எழுந்தருளியிருக்கின்ற ஆலயங்களுக் குச் சென்று, அங்கு, கூட்டுதல், மெழுகுதல், பூமாலை கட்டி உதவுதல், அணிவித்தல்,பரம்பொருளின் பெரும்புகழை எடுத்தியம் பும் திருமுறைகளை ஓதுதல், சந்நிதியில் வீழ்ந்து வணங்குதல் போன்றனவாகும். இந்தச் சரியை வழிபாட்டில் ஒழுகி வழிகாட்டி யவர் திருநாவுக்கரசு சுவாமிகள் ஆவர். இதனால் பெறப்படும் முத்தியே சாலோகமுத்தியாகும். இது தாச மார்க்கம் எனப்படும் (சாலோகம், சக + லோகம்) இறைஉலகம், சிவலோகம்.

உள்ளத்தாலும் உடம்பாலும் செய்யப்படும் வழிபாடு கிரியை வழிபாடாகும். கிரியை வழிபாடுகள் ஆவன, இறைவனின் திரு வுருவத் திருமேனியை நீராட்டுதல் (அபிடேகம்செய்தல்), அலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரஞ்செய்தல், நிவேதனம் கொடுத்தல் (திருவமுது செய்வித்தல்), தூபதீபவகைகள் முதலிய உபசாரவர்க்கங்களை இறைவன் திருமுன் காண்பித்தல், அர்ச்சனை செய்தல், செய்வித்தல் போன்றனவாகும். இந்தக் கிரியை வழிபாட்டில் ஒழுகி வழிகாட்டியவர் திருஞானசம்பந்த மூர்த்திகள் ஆவர். இதனால் பெறப்படும் முத்தி சாமீப முத்தியாகும். இது சற்புத்திர மார்க்கமாகும். (சாமீபம், இறைவனுக்குச் சாமீபமாக இருத்தல்)

பெருமளவு உள்ளத்தால் செய்யப்படும் வழிபாடு யோக வழிபாடாகும். யோக வழிபாடாவது, இறைவன் புகழை எடுத்துக் கூறும் திருமுறைகளை ஓதுதலும், வேதபாராயணத்தைச் செவிமடுத்தலுமாகும். கூட்டுப்பிரார்த்தனைகளும் இதில் அடங்கும். இந்த யோகவழிபாட்டில் ஒழுகி வழிகாட்டியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவார். இதனால் பெறப்படும் முத்தி சாரூபமுத்தியாகும். இது சகமார்க்கம் எனப்படும். (சாரூபம் = சக + ரூபம்) இறை உருவம்.

உள்ளத்தால் மட்டும் செய்யப்படும் வழிபாடு ஞானவழிபாடாகும். ஞானவழிபாடாவது: சமய உண்மைகளை நன்கு உணர்ந்தவர்களாகிய பெரியோர்களால் வழங்கப்படும் உபதேசங்களை அறிவுரைகளைக் கேட்டுச் சமய அறிவையும் சமய உணர்வையும் வளர்த்தல் ஆகும். இந்த ஞான வழிபாட்டில் ஒழுகி வழிகாட்டியவர் மாணிக்கவாசகசுவாமிகள் ஆவார். இதனால் பெறப்படும் முத்தி சாயுச்சிய முத்தியாகும். இது சன்மார்க்கமாகும். (ஞானத்திருமேனி ஒளிவடிவம்)

இந்த நான்குவகை வழிபாட்டுக்கும் வழிகாட்டியாக விளங்குவது ஞான வழிபாடேயாகும். அதாவது மக்களிடையே சமய அறிவையும் சமய உணர்வையும் வளர்க்கப் பெரிதும் உதவுவது இதுவேயாகும். இந்த வழிபாட்டுமுறை (ஞானமார்க்கம்) சைவமக்கள் தமது சமய அறிவையும் சமயஉணர்வையும் பெருமளவு வளர்த்துக்கொள்ள உதவுகின்றது. ஆலயங்களும் வித்தியாலயங்களும் இவ்விடயத்தில் மிகக் குறைந்த அளவிலேயே அக்கறை காட்டி வருகின்றன. இது வேதனை தருகிறது. மற்றைய சமயத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் இதற்கு (ஞானவழிபாடு) முதன்மை கொடுத்து வருகின்றனர். அதனாலேயே அந்தச் சமயங்களைச் சார்ந்தவர்கள் அந்தச் சமயங்களில் போதியஅறிவுடையவர்களாகக் காணப்படுகின்றனர். எமது சமயத்தவர்கள் அவ்வாறு இல்லாதிருப்பதனாலேயே எமது சமயம் பற்றிய தளம்பாத அறிவு எம்மக்களிடையே இல்லை எனலாம். இக்குறைபாட்டினாலேயே எமது சமயத்தில் நம்பிக்கை இழந்து வேறு சமயங்களுக்கு மாறியும் வருகின்றனர் எனலாம். இவ்விடயத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் காட்டிய வழியில் நாமும் சென்று எமது சமய உணர்வை வளர்ப்போமாக. இது தொடர்பாகச் சமயஸ்தாபனங்கள், ஆலயங்கள், பாடசாலைகள், நூல் நிலையங்கள், சமய அறிஞர்கள் சபை போன்றன முன்னின்று உழைத்தல் வேண்டும்.

**ஆலய வழிபாடு.**

இறைவனை எண்குணத்தான் என்று இயம்புகின்றார் வள்ளுவப் பெருந்தகை. அவன் எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன், எல்லாம் அறிபவன், விருப்பு வெறுப்பு அற்றவன், பரிபூரணன், எல்லார் உள்ளங்களிலும் உள்ளவன், அவன் நினைப்பவர் மனங் கோயிலாகக் கொள்பவன். இதனையே மனமணிலிங்கம் என்பார் அப்பரடிகள். நாம் யாரும் அவ்விறைவனைத் தேடி எங்கும் அலையவேண்டியதில்லை. அவன் எமக்குள்ளேயே இருக்கின்றான். இதனை அப்பரடிகள் கூறும் பொழுது, "என்னுள்ளே இருந்த தொன்றை யான் அறிந்ததில்லையே" என்பர். இவ்வாறு எம் ஒவ்வொருவருள்ளும் இருக்கின்ற இறைவனை உணர்ந்தும் கண்டும் வழிபடத் தன்னால் இயலவில்லையே என ஆதங்கம் அடைகின்றார் அவர். இவ்வாறு எம் உடலின் உள்ளே எழுந்தருளி யிருக்கின்ற இறைவனை உணர்ந்தும் கண்டும் வழிபடுதற்கான பயிற்சிக் கூடமே ஆலயமாகும். கோயிலானது மனஒடுக்கத்துக்கு இடமாக இருப்பதனால் ஆலயம் என்றும் இறை எழுந்தருளி அருள்பாலிக்கும் இடம் என்பதனால் கோயில் என்றும் அழைக்கப் படுகின்றது. நாம் வழிபடுகின்ற ஆலயம் புறக்கோயில் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குள்ளேயே அமைத்து வழிபடும் ஆலயம் அகக் கோயி லாகும். பூசலார் நாயனார் அகக் கோயிலிலேயே வழிபட்டார். அவர் வழிபட்ட அக்கோயிலுக்கே இறைவன் முதன்மை இடம் கொடுத்தான் என்பதனால் அகக்கோயிலின் மேன்மை பெறப்படு கின்றது. எனவேதான் "உள்ளம் பெருங்கோயில்" என்று பாடிய ருளினார் அப்பர் சுவாமிகள்.

ஆலயவழிபாடு என்னும் பொழுது, புறக்கோயிலாகிய கற் கோயிலில் செய்யும் வழிபாட்டினையே இங்கு குறிப்பிடுகின்றோம். இந்த ஆலயவழிபாட்டுக்குத் தூய்மை அவசியமாகின்றது. புறத்தூய்மையுடன் அகத்தூய்மையும் வேண்டும். புறத்தூய்மை நீரால் அமையும். அகத்தூய்மை வாய்மையால் காணப்படும் என்பர் வள்ளுவர் பெருமான். நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து ஆலயத்துக்குச் செல்லுதல் புறத்தூய்மையின் பாற்படும். ஆலயத்தை அலகிட்டு, மெழுக்குமிட்டுப் பூமாலை புனைத்தேத்திப் புகழ்ந்துபாடித் தலையாரக் கும்பிடுதல் போன்ற சரியைத் தொண்டு கள் மனத்துய்மைக்கு (அகத்தூய்மைக்கு) வழிவகுக்கும். மேலும் உண்மை பேசுதல், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய குற்றங்களிலிருந்து விடுபடுதலும் வாய்மைக்கு வழிவகுக்கும். இத்தகைய இருவகைத் தூய்மையும் உடையவர் களாக நாம் ஆலயத்துக்குச் செல்லுதல் வேண்டும். அகத்தூய்மை இல்லாதவர்கள் கூட புறத்தூய்மையுடன் ஆலயத்துக்குச் சென்று இறைவனை வேண்டித் தம்மன அழுக்கை நீக்கிக் கொள்ளலாம். எனவே அகத்தூய்மை இல்லாதவர்கள் கட்டாயம் ஆலய வழிபாடு செய்தல் வேண்டும். மனஅழுக்கு அதிகம் உடையவர்கள் ஆலயத் தில் காணப்படும் போது, அவர்களை யாரும் குறைவாக மதிப்பிடக் கூடாது. நாம் ஏளனம் செய்யக்கூடாது. சலவைத்தொழிற் கூடத்துக்கு அழுக்குத்துணிகளே கொண்டு செல்லப்படுகின்றன. தூயதுணிகள் அல்ல. அவற்றைத் திரும்பப் பெறும் பொழுது அவை அழுக்கு நீங்கித்தூயதாக விளங்குகின்றன அன்றோ?. அவ்வாறே ஆலயத் துக்குச் செல்பவர்களும் இறைவனிடம் முறையிட்டுத் தமது மன அழுக்கை நீக்கித் தூயவர்களாக வீடு செல்லுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமன்னிப்புக் கேட்டுத் தம்மைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஆலயத்துக்குச் செல்லும் பொழுது இறைவனுக்குக் கையுறையாக அர்ச்சனைக்குரிய பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும். குறைந்த பட்சம் பூக்களாவது கொண்டு செல்லுதல் வேண்டும். ஆண்டவனிடம் செல்லும் பொழுதோ, அரசனிடம் செல்லும் பொழுதோ, குழந்தைகள் இருக்கும் இடம் செல்லும் பொழுதோ, பெரியோர்களிடம் செல்லும் பொழுதோ ஏதாவது கையுறை கொண்டேசெல்லுதல் வேண்டும் என்பர் பெரியோர். ஆலயத்தின் உள்ளே செல்வதன்முன் அவ்வாலயத்தின் தூலலிங்கமாக விளங்கும் கோபுரத்தை வணங்குதல் வேண்டும். பின்னர் விதிப்படி ஆலய வழிபாட்டை நிறைவு செய்து கொண்டு, விபூதி முதலிய அருட் பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டு, முறைப்படி ஆலயத்தை வலம் வந்து வணங்குதல் வேண்டும். அதன் பின்பு பலிபீடத்துக்கு இப்பால் ஓர் அமைதியான இடத்தில், வடக்கு முகமாக இருந்து கொண்டு மானசீகமாக வழிபாட்டை நடத்துதல் வேண்டும்.

அதன் பின்னர், மூலமூர்த்தியின் திருவுருவத்தை மனத்துள் மானசீகமாக இருத்தி, மூலமூர்த்தியின் திருநாமங்களை இயன்ற வரை ஓதி, பஞ்சாட்சர செபஞ்செய்து, பஞ்சபுராணங்களை ஓதிய பின்னர் சிறிது பொழுது மூர்த்தியைத் தியானித்துத் தாம், விரும்பியவற்றை இறைவனிடம் யாசித்து, அவை கிடைத்ததாகப் பாவனை செய்து வீடு திரும்புதல் வேண்டும். இவ்வாறு ஒழுங்காகச் செய்துவரின், இதுவே அகழிபாட்டுக்கு அனுகூலமாகிவிடும். பின்பு எமது இல்லங்களிலும் அகவழிபாட்டினை மேற்கொள்ளமுடியும்.

இவ்வாறு செய்து வரும் ஓர் அன்பர், அகத்தே தன் மனதில் படுகின்ற-தோன்றுகின்ற-அந்த இறைவனுடன் மானசீகமாக உரையாட முடியும். இவ்வாறு சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் இருத்தலே அகவழிபாடாகும். இத்தகைய அகவழிபாடு நல்ல முறையில் அமையப் புறவழிபாடு அவசியமற்றதாகிவிடுகிறது. எனவேதான் இந்த அகவழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியப்பட்ட ஞானிகளும் யோகிகளும் கோயிலுக்குச் செல்வதில்லை. அவர்கள் கோயிலுக்குச் செல்லவேண்டிய அவசியமும் இல்லை எனலாம். இவ்வுண்மையை உணர்த்தும் சித்தர் பாடல் ஒன்று உளது. அதுவருமாறு:

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லு மந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன்உள் ளிருக்கையில்
சுட்டசட்டி தட்டுவம் கறிச்சுவை அறியுமோ

என்பதாகும்.

## வழிபாட்டில் விரதம்

வழிபாட்டு முறைகளில் விரதம் அனுட்டித்தலும் ஒன்றாகும். விரதமானது, மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும், மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் இறைவனை மெய்யன்புடன் வழிபடுதலாகும் என்பர். மனம் பொறிவழிச் செல்வதனால் வழிபாட்டுக்கு இடையூறு ஏற்படும் என்பதனாலேயே உணவை விடுவதும் சுருக்குவதும் தேவைப்படுகின்றன. எனவே மனதைப் பொறிவழிப் போகவிடுத்து உணவை விடுவதாலும் சுருக்குவதாலும் ஏதும் பயன் கிடையாது என்பதனை நாம் உணர்தல் வேண்டும். பொறிகளில் நாக்கு மிகவும் பொல்லாதது. அது எப்பொழுதும் சுவையையானவற்றையே விரும்பும். சுவையற்ற உணவை மெல்லவோ உள்ளே விடவோ மறுத்துக் கொண்டேயிருக்கும். "நன்றூக்காது ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம்" என்னும் வள்ளுவர் வாக்கும் இதனைத் தெளிவுபடுத்துகிறது. மாமிசத்தைச் சுவைத்து உண்பவர்களின் மனம் நன்னெறியாகிய கொலை தவிர்த்தலை விடாது என்பதாகும். இந்த நாக்கு, விரதகாலங்களில் கூட அடங்க மறுக்கும். விரத நாளன்று, ஏனைய நாட்களை விட அன்று சமைக்கப்படும் உண வின் சுவை எந்த வகையிலும் குறைபடாதிருத்தல் வேண்டும் என்பதில் நாக்கு மனதை ஈர்த்து விடுகிறது. இதன் காரணமாக, சிலவேளைகளில் வழிபாட்டில் செலுத்தப்படும் நேரத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுக்கு உருசியான உணவு வகைகளைத் தேடுவதிலும் தயாரிப்பதிலும் அதிகநேரம் செலவிடவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவையெல்லாம் விரதம் என்னும் நிலைப்பாட்டுக்குப் பொருத்தமற்றதே.

இவ்வாறு மனம் பொறிவழிப் போகாது நிற்கும் நிலை ஏற்படுமானால் விரதத்தின் போது உணவை முற்றாகத் தவிர்க்காமல் உணவைச் சுருக்குதலே போதுமானதாக அமையும் எனலாம். ஆறுநாள் உபவாசம் இருந்துவிட்டு அடுத்த நாளோ அதற்கடுத்த நாளோ சுவையான உணவு உண்பதற்கும் மனதில் திட்டம் போடுபவர்களும் உண்டு. விரதகாலத்திலேயே சிலருக்குத் திட்டத்தை மனம் எடுத்துவிடுகிறது. இந்த நிலைப்பாடு மிகமிகத் தவறாகும். ஆறுநாள் உபவாசமும் அர்த்தமற்றதாகிவிடும். குளிக்கப்போய்ச் சேறு பூசியதாக அமையும்.

உபவாசம் என்றால் இறைவனுக்குச் சமீபமாக இருத்தல் என்பதாகும். இவ்வாறு இறைவனுக்குச் சமீபமாக இருப்பவர்களுக்கு ஆசையே இருத்தல் ஆகாது என்பர். உபவாசத்தின் போது சிலர் நீரும் அருந்தாமல் இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நீர் சிறிதும் அருந்தாமல் இருப்பது உடலுக்குத் தீங்கு விளைவிப்பதாக அமையும். “சுவர் இருந்தால் தானே சித்திரம் தீட்டலாம்” என்பார்கள். எனவே விரதம் எவ்வகையிலும் உடல் நலத்தைப் பாதிப்பதாக இருத்தல் ஆகாது. இதனால் விரதம் அனுட்டிப்பவர்கள் நீர் அருந்துவது தவறாகாது எனலாம். மேலே குறிப்பிட்டவற்றை மனதிற்கொண்டு விரதம் அனுட்டிப்பவர்கள் ஆன்ம பலத்துடன் உடல்நலமும் பெறுவர் என்பது திண்ணம். அல்லாமலும் ஒருவர் தாம் மேற்கொள்ளும் விரதத்தைத் தமது உடல் நிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறுதான் தீர்மானித்தல் வேண்டும். இது மிகமிக அவசியமாகும். சில விரதங்களின் ஆரம்பத்தில் காப்புக் கட்டுதல் நடைபெறுவதுண்டு. காப்புக்கட்டுதல் என்பது சத்தியப் பிரமாணம் எடுத்தல் போன்ற சம்பிரதாயமே. இதனைச் சங்கற்பஞ்செய்தல் என்பர். இக்காப்புக்கட்டலின்போது முழங்கைக்கு மேல் காப்புக்கட்டும் வழக்கம் உண்டு. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கைக்குமேல் காப்புக் கட்டுபவர்களின் கைகளில் "ஒவ் வாமை" காரணமாக சிலருக்கு புண் ஏற்படுவதுமுண்டு. இத்தகை யோர் மணிக்கட்டில் காப்புக்கட்டுவதில் தவறேதும் இல்லை எனலாம். விரதம் அனுட்டிப்பதனால் பல நன்மைகள் உண்டு. சமிபாட்டு உறுப்புக்களின் தேய்வுகள் வளர்ச்சியடைகின்றன. சமி பாட்டுக்கு உபயோகமான சீரணநீர் சேமிக்கப்படுகின்றது. ஆனால், பித்தநீர் சேமிக்கப்படுவது பாதகமாக அமையும். பித்தம் சம்பந்தமான நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனைத் தவிர்ப்பதற்கு நீர் அருந்துதல் அவசியம். விரத காலத்தில் ஏனைய உடல் உறுப்புக்களும் ஓய்வுபெற்று உறுதி பெறுகின்றன. இத்தகைய உடல் ரீதியான நன்மைகளேயல்லாமல் உளரீதியான நன்மைகளும் விரத அனுட்டிப்பில் உண்டு எனலாம். மனம் ஒருமுகப்படுத்தப்படுகிறது. இதனால் அது தெளிவும் கூர்மையும் அடைகிறது. இதன்போது ஏற்படுகின்ற மன ஒடுக்கத்தினால் ஆன்மபலம் ஏற்படுகின்றது எனலாம். சமய நோக்கம் இன்றியே உண்ணாவிரதம் இருத்தலும் நன்மையே பயக்கும். இவ்வகையில் ஒருபொழுது "யோகியே", இருபொழுது ரோகியே, முப்பொழுது போகியே போன்ற வாக்குகளும் சிந்திக்கத்தக்கனவே.
(யோகி - யோகிகள், போகி-போகத்தைவிரும்புபவர்கள், ரோகி - நோயாளி)

## வழிபாட்டில் தியானம்

குறிப்பிட்ட ஒரு விடயத்தில் இடைவிடாது மனம் ஈடுபட்டிருத்தல் தியானம் எனப்படும். தாம் உபாசனை செய்யும் மூர்த்தியை இடைவிடாது சிந்தித்து வணங்குவதே தியான வழிபாடாகும். வழிபாட்டில் மிக உச்சமான நிலையே தியானமாகும். நீர் நிறைந்த ஒரு பாத்திரத்தின் ஒரு சிறு துவாரத்தினூடாக நீர் சிறுசிறு துளிகளாக வெளியே வந்து சிந்திக் கொண்டிருக்கும். அப்பாத்திரத் தில் உள்ள நீர்த்துளிகள் இடைவிடாது துளித்துக் கொண்டிருப்பது போலவே, நாம் வழிபட்டு வருகின்ற இறைவனின் திருவுருவமும் தொடர்ந்து எமது மனக்கண்ணில் பட்டுக்கொண்டே இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இது இலகுவான காரியம் அன்று. இதனை, "சரண கமலாலயத்தை அரைநிமிடநேரமட்டும் தவமுறை தியானம் செய்ய அறியாத மனம்" என்னும் அருணகிரிநாத சுவாமிகள் தனது மனதைச் சாடுவதன் மூலம் உணரலாம். இதற்கு வசதியாக, புறச்சூழலின் தாக்கம் சிறிதும் இல்லாததும், தூய்மை உள்ளது மான, ஏகாந்தமான ஓர் இடத்தைத் தெரிவு செய்தல் வேண்டும். இவ்வழிபாடு ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு, இல்லங் களில் பயிற்றப்பட்டு, கானகத்தில் நிவர்த்தியுறலாம். அவரவர் பக்குவநிலைகளுக்கு ஏற்ப, தியானத்தின் இலக்கு ஆலயத்திலோ, அன்றி இல்லத்திலோ அமையப் பெறலாம்.

ஆலயத்தில் தீபாராதனை நடைபெறும்போது, அத்தீபத்தைச் சிவசோதியாக நினைத்து அந்தச் சோதிவடிவை மனத்தில் நினைத்து வழிபடுகின்றோம். காலப்போக்கில் தீபவழிபாட்டின் போது, அத்தகைய தீபஒளி அடியார்களால் மறைக்கப்பட்டாலும், அத் தீபஒளியை மானசீகமாகக் கண்டு வழிபடமுடியும். இவ்வாறு மானசீகமாகக் கண்டு வணங்கும் நிலை சாத்தியமானால், இடையில் உள்ளவர்களால் பாதிப்பு ஏற்படாது அமைதியுடன் காத்திருத்தல், தீப ஒளியையே காணமுடியும் என்பது அடியார் களின் அனுபவம். இத்தகைய தியானம் கைகூடும், ஆலயத்துக்குச் செல்ல முடியாத சந்தர்ப்பங்களிலும், ஆலய மணியோசை கேட் கின்ற நேரங்களிலெல்லாம் அந்தத் தீப ஜோதியை மானசீகமாகக் கண்டு மூலமூர்த்தியை மானசீகமாகத் தியானித்து வழிபடமுடியும். பேரொலி எழுப்பவல்ல பெரிய கண்டாமணி ஆலயங்களில் அமைக் கப்படுவதும் இவற்றைக் கருத்திற்கொண்டேயாகும். இத்தகைய தியானநிலை படிப்படியாக வளர்ச்சி பெற்று முதிர்ச்சி அடையும் நிலையே சமாதி நிலைக்கு இட்டுச்செல்ல வல்லதாகும். எனினும் அவன் அருளினாலேயே அதுவும் ஆக முடியும். இதனையே மணிவாசகப்பெருமான் "அவன்அருளாலே அவன்தாள் வணங்கி" என்று பாடியருளினார். இவ்வாறான தியான நிலையின் சமாதி நிலை அடைதல் என்பது, தனு, கரண, புவன, போகம் ஆகிய மாயையின் நின்றும் விடுபட்டு, அவற்றைத்துறந்து இறைவனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றித்தலாகும். அதாவது பக்குவநிலை அடைந்த ஜீவான்மா பரமான்மா எனவிளங்கும் இறைவனுடன் இரண்டறக்கலத்தலாகும். இது தூய இரும்புத் துண்டை காந்தம் கவர்வது போன்றதாகும். இரும்புகாந்தத்தைக் கவர்ந்தது அல்லது காந்தம் இரும்பைக் கவர்ந்தது என்று சொல்ல முடியாதது போன்ற ஒருநிலையையாகும். இது இன்னொருவகையில் கூறினால் சிவகாமி ஆகிய ஆன்மா, சிதம்பரன் ஆகிய பதியுடன் இரண்டறக்கலத்தலாகும்.

இதனை விளக்கும் பாடல் வருமாறு:

"சிவகாமி யானுனது சிதம்பரனே என்ன
இருவரும் ஒன்றாயினர் என்றே அறையும் சுருதி
எவர்தாம் முன் அணைந்தனர் இதுவரையும் அறியோம்
என்பதாகும்.

## வழிபாட்டில் பூசை

இந்து ஆலயங்களில் நடைபெறும் பூசைகளும் தியான வழிபாட்டுக்கு உதவுவனவாகவே அமைந்து காணப்படுகின்றன. ஐந்து புலன்களையும் ஒருமுகப்படுத்தி வழிபாட்டில் ஈடுபடுவதே தியானமாகும். இந்து ஆலயங்களில் நடைபெறும் பூசைகளிலும் இந்த நோக்கத்தையே அவதானிக்க முடியும்.

இந்து ஆலயம் ஒன்றில் பூசை வழிபாட்டுக்காக அடியார் கள் கூடியிருக்கின்றனர். அடியார்கள் பூசைக்குரிய ஆயத்தங்களைச் செய்வதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். வசந்தமண்டபப்பூசை நடைபெறவுள்ளது. எழுந்தருளி மூர்த்தி ஆடை, ஆபரணங்களினா லும் மலர்மாலைகளினாலும் அலங்காரம் செய்யப்பட்டு அழகுடன் காணப்படுகின்றார். தீபங்கள் ஒளிவீசிக்கொண்டிருக்கின்றன. சாம் பிராணி, ஊதுபத்திபோன்ற வாசனைப் பொருட்களின் புகை எங்கும் பரந்து நறுமணம் வீசிக் கொண்ருக்கின்றது. சுவாமியின் நிவேத னத்துக்குரிய சுவையான நிவேதனப் பொருட்கள் படைக்கப்பட்டுள் ளன. பலசுவையான பழங்களும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் கண்டாமணி ஒலிக்கிறது. நாதஸ்வரஇசை, சங்குஒலி, அடியார்களின் "அரோகரா அரோகரா" ஒலியும்எழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. திரைநீங்குகிறது. தீபாராதனை நடைபெறுகின்றது. இதுவரை பலவித காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அடியார்களின் மனம் திசைதிருப்பப்படுகின்றது. கண் சுவாமியின் அலங்காரத்தில் ஈடுபடுகின்றது. காது மணியோசை, சங்கின் ஒலி, அடியார்களின் வாழ்த்தொலி முதலியனவற்றில் ஈடுபடுகின்றது. மூக்கு,அங்கு காண்பிக்கப்படுகின்ற தூபதீபங்களிலிருந்து வருகின்ற நறுமணத் தில் ,ஈடுபடுகின்றது. நாக்கு அங்கு படைக்கப்பட்டிருக்கின்ற இனிமையான நிவேதனப் பொருட்களில் ஈடுபடுகின்றது. கைகள் கூப்பியவண்ணம் சுவாமியை வணங்குகின்றது. இவ்வாறு புலன்கள் ஐந்தும் வெவ்வேறு வகையில் ஈடுபட்டிருந்தாலும் அவையெல்லாம் இறைவனோடு தொடர்பு கொண்டதாகவே காணப்படுகின்றன. அதாவது ஐந்து புலன்களும் சுவாமியுடன் தொடர்புடையனவாகவே செயற் படுகின்றன. எல்லாப் புலன்களும் சுவாமி என்னும் மையப் புள்ளியிலேயே வருகின்றன எனலாம்.

பல்வேறு வழிகளில் சென்றுகொண்டிருந்த மனதை இவ்வாறு ஐம்புலன்கள் வழியே ஒரு முகப்படுத்தி இறைவன் பால் ஈர்ப்பதாக அமைந்த முறையே, இந்து ஆலயங்களில் நடைபெறும் பூசைகளா கும். இத்தகைய பூசைகளின் தத்துவத்தை உணராதவர் களே, இந்துக்கோவில்களில் நடைபெறும் பூசைமுறையைப் பரிகசிப்பவரா வர். ஏககாலத்தில் ஐம்புலன்களையும் இறைவன்பால் ஈர்த்து முழுமையான மன ஒடுக்கத்தைத் தரவல்லனவே இத்தகைய பூசை முறைகளாகும். இவையெல்லாம் அர்த்தமுள்ளனவாக அமைவதைக் காணலாம். இதனை உணராமல் இவை வெறும் குப்பாடித்தனமானவை, ஒழுங்கு இல்லாதவை, வெறும் ஆரவார மானவை என்று கூறுவது ஏற்புடையதன்று. இவை வெளித் தோற்றத்தில் ஒழுங்கீனங்கள் போலத் தோன்றினாலும், அவை ஆன்மாவை வயப்படுத்துபவையாகவே அமைகின்றன எனலாம். மனம் ஒரு குரங்கு என்பர். அத்தகைய மனதை அடக்கி, ஒருமைப்படுத்தி, வழிபடவைக்கும் இத்தகைய பூசைமுறையைவிட மேலான மார்க்கம் இருக்கவே முடியாது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழிபாட்டில் திருமணம்**

சைவமக்களின் வாழ்க்கையில் இடம்பெறுகின்ற திருமண வைபவங்களும், வழிபாடு நோக்கிய நிகழ்வேயாகும். திருமண மண்டபம் கோயிலாகவும், மணமகன் சிவனாகவும், மணமகள் உமையாகவும், திருமணக்கிரியை நடத்துபவர் பிரமதேவராகவும் கொள்ளல் வேண்டும். இவ்வகையில் திருமணத்துக்கு வந்திருப் பவர்களைத் தேவர்களாகவும் அப்போதைக்குக் கொள்ளலாம். ஆலயங்களில் நடைபெறுகின்ற திருக்கல்யாணத்துக்கு நாம் எவ்வாறு செல்லுகிறோமோ அத்திருக்கல்யாணத்தில் இடையே நிகழும் தீபாராதனையில் நாம் எவ்வாறு நடந்து கொள்வோமோ அவ்வாறே மக்களின் திருமணங்களின் போதும் நாம் நடந்து கொள்வது நன்று. அப்பொழுது அதுவும் வழிபாடாகவே அமையும். புத்திசாலிகள் இதனையும் வழிபாடாகவே கருதுவார்கள். எங்கெல் லாம் வழிபாடு செய்யமுடியுமோ அங்கெல்லாம் வழிபாடு செய்வது நல்லதேயாகும். மணமகனைச் சிவனாகக் கொள்வதனாலேயே மணமகன் தலைப்பாகையுடன் ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக் கப்படுகின்றார். இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். மணமகனும் மணமகளும் சிவனும் அம்மனுமாகக் கொள்வதனால் அறுகரிசி இடும்பொழுது அவர்களை வணங்கி பாதத்திலிருந்து தொடங்கி சிரசுவரை இடுதலே பொருத்தமுடை யது. அதாவது இறைவழிபாடு பாதாதிகேசமாகவே நடைபெறுதல் வேண்டும். தீபாராதனை முதலியன நிகழ்த்தும் பொழுதும் கீழேயிருந்து தொடங்கி (பாதாதிகேசமாக) தீபவரிசைகளைக் காண்பித்தல் வேண்டும். வணங்கும் பொழுதும் இறைவனது திருவடிகளையே முதலில் வணங்குதல் வேண்டும். மேலும் மணமக்கள் சிவனாகவும் அம்பிகையாகவும் கருதப்படுவதனால் நான்காம்நாள் சடங்குவரை சைவஆசாரம் பேணப்படவேண்டும். தாவர உணவையே உட்கொள்ளுதல் வேண்டும். குறிப்பு: திருமண வைபவத்தின் காலத்தில் திருமணமண்டபத்தில் வைத்து அசைவமாகிய "கேக்" போன்றன வழங்குவது பொருத்தமற்றது. பாவமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்திமகால வழிபாடு

ஒருவருடைய இறுதிக்காலத்தை அவருடைய அந்திமக்காலம் எனலாம். மனிதனின் ஏழுவகையான பருவங்களில் கிழப்பருவம் அந்திமகாலம் எனப்படும். ஆனாலும் கிழப்பருவம் அடையு முன்பே உயிர்நீத்தலும் காணப்படுகின்றது. எனினும் உடல் நோய்முற்றி வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட நிலையில் படுத்த படுக்கையாக இருப்பவர்களுக்கும் அந்திமகாலம் அதுவாகக் கொள்ளலாம். இவ்வாறு உடலை விட்டு உயிர் பிரியும் பொழுது இறைவழிபாடு மேற்கொள்ளுதல் சாலச் சிறந்ததே. நோயாளி மரணப்படுக்கையில் இருக்கும் பொழுது, அவரது மனம் தனது குடும்பநிலை மனைவி, மக்கள், உற்றார், உறவினர் பற்றி எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும். செய்வதறியாது மனம் பெருங்குழப்பநிலையில் இருக்கும்பொழுது அவரது ஆவி அவரைவிட்டுப் பிரிந்துவிடுகிறது. அவரது உயிர் பிரியும் பொழுது அவர் எதில் ஈடுபாடு காட்டுகின் றாரோ அதற்கு அமைவாகவும் அவர் செய்து கொண்ட வினையின் பெறுபேறுக்கமையவுமே அவரது அடுத்தபிறவி அமையும் என்று கூறுவார்கள். இக்கருத்தினை "தீத்திறவினையினாலே சிறைப்படும் உயிரையெல்லாம் பார்த்தனர்" என்று திருவாதவூரடிகள் புராணத் தில் கூறப்படும் தொடர் எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய நிலையை மாற்றி, ஆன்மா நன்னிலை அடைய வேண்டுமானால், அது உடலை விட்டுப் பிரியும் நேரத்திலாவது இறைவனின் திருவடிகளை மறவாது தியானித்து, அந்தத் தியானத்திலேயே உடலை விடுதல் வேண்டும். சாவை அணைத்துக்கொள்ளுதல் வேண்டும். இந்தநிலை எடுத்த எடுப்பிலேயே கைகூடுவதன்று அதற்கும் பயிற்சி வேண்டும். ஒருவரது அந்திமகால வேளையில் அவரது படுக்கையின் அருகாமையில் இருந்து தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகள் ஓதும் வழக்கம் முன்னோர் களிடம் இருந்துவந்தது. இப்பொழுது காணமுடிவதில்லை. இயற்கை மரணம் இப்பொழுது அருகி வந்துள்ளமையும் ஒரு காரணமாகலாம். உடலைவிட்டுப் பிரிந்த உயிர் அடுத்த பிறவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்காதிருப்பதற்காகவோ, அன்றி நல்லபிறவியை எடுப்பதற்காகவோதான் அந்திமகால வழிபாடு அமைகின்றது எனலாம்.

அவ்வேளையில், ஏனைய உலக நினைப்புக்களை மறந்து, இறைவனது திருவடிகளே துணைஎனக் கொண்டு அவனை இடையறாது தியானிப்பதற்கானவழியை அப்பரடிகள் அருளிய பின்வரும் திருமுறை எமக்கு உணர்த்துகின்றது:

"ஐயுந்தொடர்ந்து வழியுஞ் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்,
செய்யுந்திரு வொற்றியூருடையீர் திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே."

என்பதாகும்.

"ஐ" என்பது சழியாகும். அந்திமகாலத்தில் பெரும்பாலானவர்களுக்கு சழியின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும். அப்படியான நேரத்தில் கண்பார்வை அற்றுவிடும். சுயநினைவு இல்லாது போகும். இறுதியாக, "மெய்" என்று உபசார வழக்கால் அழைக்கப்படுகின்ற இந்த உடம்பே பொய்யென்று சொல்லும்படியான நிலை ஏற்பட்டு விடும். இதனை அப்பரடிகள் "திருவொற்றியூரில் உள்ள சிவபெருமானே! எனக்கு ஓர் உதவி செய்யுங்கள் எனத் தங்களை வேண்டிக்கொள்கின்றேன். அது என்னாவில், எனது உயிர்பிரிகின்ற வேளையில், அடியேனைத் தூயவெண்ணீறு அணி யச்செய்து, சிவாயநம என்னும் திருமந்திரத்தை ஓதச்செய்து தேவரீருடைய பாதாரவிந்தங்களைக் கைகளால் தொழத்தக்க பக்குவநிலையை எனக்குக் "கற்பித்தருளுதல்" என்பதாகும்.

இவ்வாறு அவர் தனக்காக வேண்டிக்கொண்டாலும், அதனை எமக்கான அறிவுறுத்தலாகவும் கொள்ளலாம்.அதாவது இவ்வாறு அந்திமகாலத்தில் செய்யவேண்டுமானால் எமக்கு அதற்கான பயிற்சி தேவைப்படுகின்றது எனலாம். ஏனெனில் ஒவ்வொரு நாளுமே நாம் பிறக்கின்றோம். இறக்கின்றோம். திருவள்ளுவர் இப்படித்தான் கூறியிருக்கிறார். அதாவது,

"உறங்குவது போலுஞ் சாக்காடு, உறங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்பது போலும் பிறப்பு”

என்பதாகும்.

நித்திரை கொள்வது இறப்பாகவும் விழித்தெழுவது பிறப்பாக வும் அவர் கூறியுள்ளார். ஒவ்வொருநாளும் நாம் இறக்கும்பொழுது (நித்திரைக்குப் போகும் பொழுது) நாவுக்கரசு பெருமான் கூறியபடி “சிவாயநம” என்று திருநீறு அணிவோம். இரண்டு கைகளையும் கூப்பி எம்பெருமானைவணங்குவோம். இவ்வளவு தான் அதிகம் இல்லை. அதிகநேரமும் தேவையில்லை. இந்தமூன்று காரியங் களையும் ஒழுங்காக நித்திரைக்குப் போகுமுன் செய்துவருவோம். இந்தப் பழக்கமே அந்திம காலத்திலும் எமக்குக் கைகொடுக்கும். இதுவே அந்திமகால வழிபாடாக அமையும். இதனை விரிவாகவும் செய்யலாம்.

அதுவருமாறு: நித்திரைக்குப் போகுமுன் கைகால்முகம் கழுவி பூ எடுத்துக் கொண்டு சுவாமிஅறைக்குச் சென்று, சிவாயநம என்று கூறித் திருநீறு அணிந்து, தெரிந்த திருமுறை ஒன்றை ஓதி, சுவாமியைக் கைகூப்பி வணங்கி, சிறிதுநேரம் கண்களைமூடி மானசீகமாகச் சுவாமியை வணங்கியபின், அப்படியே நேராகப் படுக்கையறை சென்று படுத்துக் கொள்ள வேண்டியதுதான். படுக்கும் பொழுதும் சிவசிவ எனக்கூறலாம். அடுத்தநாள் நித்திரை விட்டெழும் பொழுதும் சிவசிவ என்று சொல்லி எழுந்து நேரே சுவாமிஅறைசென்று சுவாமிதரிசனம் செய்து கொள்ளலாம். இது எல்லோராலும் செய்யக்கூடிய இலகுவான ஒரு வழிபாடாகும். நன்றே செய்வாய், அன்றே செய்வாய்.

## கூட்டு வழிபாடு

தனிவழிபாடுதான் உகந்தது. எனினும் கூட்டு வழிபாடும் தேவைப்படுகின்றது. கூட்டுவழிபாடு தனிவழிபாட்டுக்கு வழிசெய்யும் எனலாம். கூடிவழிபடுவதனாலேயே கூட்டுவழிபாடு என்பர். கூட்டுப் பிரார்த்தனை என்றும் கூறுவர். தனித்தனியாக வழிபாடு செய்ய இயலாதவர்கள் ஒன்று கூடித் தோத்திரப் பாடல்களைப் பாடி வழிபடுதலே தனிவழிபாட்டுக்கு உதவியாக அமையும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டு முயற்சி எப்பொழுதும் பயனுடையயதே. இறைவனின் பெரும்புகழை எடுத்தியம்புகின்ற திருமுறைகள் சிலருக்குத் தெரியாதிருக்கலாம். தெரிந்ததாலும் பாடமுடியாதிருக்கலாம். பாடுவதில் கூச்சம் உள்ளவர்களாக இருக்கலாம். இத்தகையோருக்குக் கூட்டுவழிபாடு பயனுடையதே. கூட்டுவழி பாட்டில் இடம் பெறும் பாடல்களில் திருமுறைகளே இடம் பெறுதல் வேண்டும், திருமுறைகள், இறைவனது திருவருள் பெற்றவர்களால் பாடப்பெற்றனவாகும். அப்பாடல்களே இறைவனது அருளைப் பெறுவதற்குப் பொருத்தமானதாகும். இறைவனது அருளைப் பெறாதவர்களால் பாடப்பெற்ற பாடல்கள், எம்மை இறைவன்பால் ஈர்த்துச் செல்லமாட்டா. குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியாதல்லவா?

ஆனால் இக்காலத்தில் இடம்பெறும் கூட்டுவழிபாட்டில் இறையருளைப் பெறாத சாதாரண மக்களால் பாடப்பட்டபாடல்களே இடம்பெறுகின்றன. இவை கூட்டுவழிபாட்டில் இடம்பெறுவது தவிர்க்கமுடியாததாக இருந்தால், அவற்றுடன் சில திருமுறைகளாவது இடம்பெறச் செய்தல் வேண்டும். குறைந்தபட்சம் பஞ்சபுராணங்களாவது கட்டாயம் இடம்பெறுதல் வேண்டும். கூட்டு வழிபாடு வளர்ச்சியடையத் திருமுறைகளையும் கூடுதலாக இணைத்துக்கொள்ளலாம். திருமுறைகள் இடம்பெறாத கூட்டுப் பிரார்த்தனைகளோ, பஜனைகளோ பயனற்றவைகளே. வெறும் ஆரவாரமே. ஆறுமுகநாவலர் அவர்கள் ஆலயங்களில் திருமுறைகளே ஓதுதல் வேண்டும் என வற்புறுத்தியுள்ளார் என்பதனைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இந்தக் குறைகளை நிவர்த்தி செய்யும் முகமாகவே திருமுறை மன்றங்கள் இயங்கிவருகின்றன. இவ்வகையில் அகில இலங்கைத் திருமுறை மன்றம் பெரும் பணியாற்றி வருகின்றது. எனவே கூட்டுப் பிரார்த்தனையில் திருமுறைகள் இடம்பெறச் செய்வதற்கு மேற்படி மன்றத்துடன் தொடர்பு கொண்டு அம்மன்றத்தின் உதவியை நாடலாம்.

"நால்வர் பொற்றாள்எம் முயிர்த்துணையே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழில் வழிபாடு

பூசை செய்தற்குரிய தகுதி தமிழுக்கு நிறைய உண்டு. நமது நாயன்மார்கள் அருளிய திருமுறைகள் தமிழ் வேதங்கள் எனப் போற்றப்படுகின்றன. இவர்கள் திருமுறைகளைத் தமிழில் பாடியே இறையருள் பெற்றார்கள். பல அற்புதங்களையும் செய்தார்கள். அவர்கள் தமிழில் பாடிய திருமுறைகளை இறைவன் பெரிதும் விரும்பிக் கேட்பான். சிவபெருமான் 'சுந்தரா! என்னைப் பாடு' என்று "பித்தா" என்றே தமிழில் அடியெடுத்துக் கொடுத்துள் ளார். அல்லாமலும் சுந்தரரின் பாடலில் லயித்து இருந்து விட்டேன் என்றே வியாக்கிரபாத பதஞ்சலிமுனிவர்களுக்குக் கூறியுள்ளார். மேலும் சேக்கிழார்சுவாமிகளுக்கு 'உலகெலாம்' எனத்தமிழிலேயே அடியெடுத்துப் பெரியபுராணம் பாட வைத்தார். அதுமாத்திர மல்லாமல் மாணிக்கவாசகசுவாமிகள் பாடவும் இனிய திருவாசகப் பாக்கள் அறுநூறினையும் திருக்கோவையார் நானூறினையும் சிவபெருமானே தமது திருக்கரத்தால் அவர் பாடப்பாட எழுதினார் என்றால் தமிழில் பூசைசெய்வதனை அவர் விரும்பமாட்டாரோ? மிகமிக விரும்புவார். மேலும் 'சைவத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான் முருகன்' என்றார் அருணகிரிநாதசுவாமிகள். அத்தகைய முருகன் பைந்தமிழில் பூசை செய்வதை ஏற்கமாட்டாரா? மேலும் தமிழில் பூசை செய்ய மறுக்கும் தமிழர்கள் செந்தமிழ்ப் பயன் அறியா அந்தகர் எனச் சம்பந்தர் சாடுவதனையும் நாம் கருத்தில் கொள்ளல்வேண்டும். இவற்றின் மூலம் தமிழர்கள் தமிழிலேயே பூசைசெய்யவேண்டும் என்பது புலப்படுகின்றது அல்லவா?

இவற்றை ஆய்ந்து நோக்கில், காலம் காலமாக ஆரியர்களின் அடிவருடிகளாக வாழ்ந்த பழக்க தோசமே வடமொழியில் பூசை செய்தல் வேண்டும் என்னும் ஆசையாகும். தமிழில் பூசைசெய்யும் மனப்பாங்கு தமிழராகிய எமக்குத் தேவை. வடமொழிவேதத்தை எழுதாமறை என்பர். ஆனால் அவை இன்று எழுதாமறையாக இல்லை. வடமொழி மந்திரங்கள் பெரும்பாலும் எழுதப்பட்டே பயிலப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளில் மந்திரங்கள் வாசிக்கப்படுகின்றன. இது தவறாகும். மந்திரங்களின் உச்சரிப்புக்கள் உரியமுறையில் சரியாக அமையவேண்டும் என்பதற்காகவே அவை எழுதிப் பயிலப்படாமல் தகுதிவாய்ந்த குருமூலம் செவிவழி ஓதப்பட்டுப் பயிலப்பட்டு வந்துள்ளது. ஆனால் இன்று இந்த நிலை பெருமளவு மாறிவிட்டது. இதற்கான தகுதிவாய்த்த குருமார் மிகமிக அரிதாகவே உள்ளனர். இந்நிலையில் வடமொழியில் பூசைசெய்யவேண்டும் என அடம் பிடிப்பது அர்த்தமற்றதாகும். இந்தக் குறையை நிவர்த்திசெய்ய ஒரே ஒரு வழி தமிழில் பூசைசெய்தலாகும். இன்று தமிழர் வழிபடும் கோயில்களில் பூசை செய்பவர்களும் தமிழரே. எனவே இன்று பூசை செய்பவர்களே தமிழில் பூசை செய்யக்கூடிய ஒழுங்குகளை மேற்கொள்வது பொருத்தமாகும். வடமொழியில் பாண்டித்தியம் பெற்ற தமிழர்களாகிய குருமார் முன்னின்று ழைத்தல் அவன் அருளால் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி............



யாழ் மாநகரில் வளங்கள் பல நிறைந்த அரியாலையூரில் பரமானந்தர் பார்வதி தம்பதியினரின் ஏகபுதல்வராக முத்தாகமலர்ந்தார் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திலும், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலையத்திலும் கல்விபயின்றார். ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி மாணவர்களை நல்வழிப்படுத்தி நற்பிரசைகளாக உருவாக்கியவர்.

பிரதேசத்தில் உள்ள பல ஆலயங்களில் கூட்டுப்பிராத்தனை, பஞ்சபுராணம் ஓதுதல், புராணபடனம், திருவாசகம், முற்றோதல், சொற்பொழிவு ஆகிய சிவப்பணிகளில் அயராது ஈடுபட்டு அரும்பணியாற்றியவர். கோயில்கள் சன சமூகநிலையங்கள் திருமுறை மன்றங்கள், இந்துமா மன்றங்கள் ஆகியவற்றில் பல பதவிகளை வகித்து பல முன்னேற்றமான பணிகளை மேற்கொண்டு அளப்பரிய சேவை செய்துள்ளார்.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை பெறுவதற்காக முக்கிய பங்கு வகித்தவர் தந்தை செல்வாவுடன் இணைந்து சேவை ஆற்றினார். மகன் சந்தோசம் மாஸ்ரர் என்னும் பெயர்தாங்கி தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து மத்திய குழு உறுப்பினராகவும், திருமலை மாவட்டத் தளபதியாகவும் செயற்பட்டு, 1987 ஐப்பசி மாதம்21ந் திகதி கோண்டாவில் இந்திய அமைதிப்படையினருடனான நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். சந்தோசம் மாஸ்ரரின் தந்தை எனத் தேசியத்தலைவரும் மிக்க உறுதுணையாகச் செயற்பட்டவர் பெருமைப்பட்டுக்கொள்ளும்படி புகழ் பெற்றுக் கொடுத்தவர் நல்லூர் வட்டவைத்தலைவராகச் செயற்பட்ட இவர் துணைப்படை பயிற்சியும் பெற்றவர்.

வாழ்வில் பெற்றுக்கொண்ட அனுபவத்தினாலும் தெய்வ அருளினாலும் தமது சீரிய சிந்தனையில் உதித்த கருத்துக்களை வழிபாடு என்னும் சிறந்த நூலாக ஆக்கித்தந்து தனது கனவு நிறைவேறி விட்டது என்ற மனநிறைவோடு 22.02.2002ல் அமரராகி விட்டார்.

**திருவள்ளுவர் ஒப்(f)செற் பிறிண்டிங் நல்லூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org